முதன்மை மாவட்ட நீதிமன்றம், கரூர்.

அ.வ.எண். **33/2014**

2025-ம் வருடம் மார்ச் திங்கள் 20-ம் நாளன்று வாதி சாட்சியாக பி.வா.சா.3-வது நபரின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் 54 விதியின்படி 95 வது பிரிவின்படி ஏற்பட்டுள்ளபடி திரு.ராமகிருஷ்ணன், உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| பெயர். | : தானுமூர்த்தி | தொழில் | : |
| த/பெ. | : | வட்டம் | : |
| முகவரி | : | மதம் | : |
| ஜாதி | : | வயது | : |

முதல் விசாரணை:-

நான் தற்போது தென்காசி சார்பதிவாளர் அலுவலகத்தில், சார்பதிவாளராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்ற அழைப்பாணையின் அடிப்படையில் சாட்சியம் அளிப்பதற்காக முன்னிலையாகியுள்ளேன். நான் கடந்த 2009 முதல் 2012 வரை கரூர் மாவட்டம், மேலக்கரூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் சார்பதிவாளராக பணிபுரிந்து வந்தேன். மேலக்கரூர் சார்பதிவாளர் அலுவலகத்தில், 08.07.2011 அன்று நான் சார்பதிவாளராக பணிபுரிந்து வந்தபோது, ஆவண எண். 6610/2011 மற்றும் ஆவண எண். 6611/2011 ஆகியவை என்னுடைய அலுவலகத்தில், என்னால் பதிவு செய்யப்பட்ட ஆவணங்களாகும். அந்த ஆவணங்கள் என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 மற்றும் 3 ஆகும். மேற்சொன்ன ஆவணங்கள் பதிவு சம்மந்தமாக கரூர், மாவட்ட குற்றப்பிரிவு ஆய்வாளர் என்னை விசாரித்தாரா என்றால் எனக்கு சரியாக ஞாபகமில்லை.

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

வா.சா.ஆ.2 மற்றும் 3 ஆவணங்களை நான்தான் பதிவு செய்தேன். பதிவு செய்தபோது, அந்த ஆவணங்களின் மூல ஆவணங்களை பார்வையிட்டேனா என்றால் பொதுவாக மூல ஆவணங்களை பார்வையிட்ட பின்னர்தான் பதிவு செய்வது வழக்கம். வா.சா.ஆ.2 மற்றும் 3 ஆவணங்களை கிரய ஆவணம் எழுதிக்கொடுத்த நபருக்கு தகுதியிருந்த காரணத்தினால்தான் பதிவு செய்தேன். வா.சா.ஆ.2 மற்றும் 3 ஆவணங்களை பதிவு செய்தபோது, தத்து சம்மந்தப்பட்ட ஆவணங்களை பார்வையிட்டேனா என்றால் எனக்கு ஞாபகமில்லை. நான் முறையாக எந்த மூல ஆவணங்களை நான் பரிசீலனை செய்யவில்லை என்றால் சரியல்ல. கிரயம் எழுதிக்கொடுத்த நபரின் தத்து ஆவணங்களை நான் பரிசீலனை செய்யவில்லை என்றால் அதுபற்றி எனக்கு ஞாபகமில்லை. வா.சா.ஆ.2 மற்றும் 3 ஆவணங்களை நான் பதிவு செய்தபோது, எனக்கு அழுத்தம் இருந்தது என்றும், அதனால் நான் அந்த ஆவணங்களை முறையாக பதிவு செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. மேற்சொன்ன ஆவணங்களை பதிவு செய்தபோது, எழுதிக்கொடுத்த நபர் தனியாக வந்திருந்தாரா அல்லது அவரை சுற்றி இதர நபர்கள் இருந்தனர்களா என்றால் பத்தாண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டதால் எனக்கு ஞாபகமில்லை. எனது அலுவலகத்தில் பதிவு செய்யப்படும் ஆவணங்கள் சம்மந்தமாக அசாதாரணமான சூழ்நிலை ஏற்படும் சமயத்தில் அந்த ஆவணங்கள் பதிவு சம்மந்தமான நினைவுகள் எனக்கு உள்ளது. வா.சா.ஆ.2 மற்றும் 3 ஆவணங்கள் பதிவு சமயத்தில் அவ்வாறான சூழ்நிலை நடந்ததாக எனக்கு நினைவில்லை. வா.சா.ஆ.2 மற்றும் 3 ஆவணங்களை பதிவு செய்தபோது, அந்த ஆவணத்திற்கான கிரயத்தொகை என் முன்பாக செலுத்தப்பட்டதா என்றால் கிரயத்தொகை ....

எதுவும் என் முன்பாக செலுத்தப்படவில்லை. வா.சா.ஆ.2 மற்றும் 3 ஆவணங்கள் பதிவு செய்யப்படும்போது, கண்காணிப்பு கேமரா எங்கள் அலுவலகத்தில் பொருத்தப்பட்டிருந்ததா என்றால் அந்த காலக்கட்டத்தில் எங்கள் அலுவலகத்தில் கண்காணிப்பு கேமரா பொருத்தப்படவில்லை. வா.சா.ஆ.2 மற்றும் 3 ஆவணங்கள் முறையாக என்னால் பதிவு செய்யப்படவில்லை என்றால் அது முறையான பதிவுதான். வா.சா.ஆ.2 மற்றும் 3 ஆவணங்களை எழுதிக்கொடுத்தவர் எங்கள் அலுவலகத்திற்கு வந்தபோது தன்னிச்சையாக செயல்பட முடியாத நிலையில் இருந்தார் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u>

இல்லை.

ஒம்/- ஆர்.சண்முகசுந்தரம்<br>
முதன்மை மாவட்ட நீதிபதி,<br>
கரூர்